DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.291/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 31[th]day of October 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 6** | கிராமம் | : | நாகனேந்தல் |
| பெயர் | : | திரு.ராமச்சந்திரன் | தாலுகா | : | ஆர்.எஸ்.மங்களம் |
| த/ பெ. | : | உலகநாதன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 40 | ஜாதி | : | - |
| தொழில் | | காவல் ஆய்வாளர் | | | |

<u>நாள்: 31.10.2023</u>
<u>நேரம்: 12.00</u>

1ம் எதிரி பூமாதேவி, 2ம் எதிரி வசந்தா, 3ம் எதிரி கருப்பையா ஆஜர்.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த கடந்த 28.06.2020ம் தேதியன்று 23.00 மணியளவில் கேணிக்கரை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த வந்த திரு.கோட்டைச்சாமி என்பவர் அ.சா.1–னிடம் புகார் மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை என் வசம் ஒப்படைத்தார். நான் வழக்கு கோப்புகளை மேல் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். பின்பு 20.02.2021ம் தேதியன்று எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு திரு.கோட்டைச்சாமி அவர்கள் விசாரித்த சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் 1, 2 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி), 323 இதச கீழும், 3ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் பிரிவுகள் 4 TNPHW கீழும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு கு.வி:</u>**

இந்த வழக்கானது கேணிக்கரை காவல்நிலைய குற்ற எண். 456/2020 வழக்கிற்கு எதிர் வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கின் புகார்தாரர் பூமாதேவி இந்த வழக்கின் 1ம் எதிரி என்றால் சரிதான். 1ம் எதிரி தான் காவல்நிலையத்தில் முதன் முதலில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எதிரிடை வழக்கில் பதிவு செய்யப்படும் போது யாரால் சம்பவம் நடைபெற்றது என்பதை விசாரணையில் இருந்து அறிய வேண்டுமென்று போலீஸ் Standing order–ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் புலன்விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் குறித்து இவ்வழக்கின் எதிரிகள் ஹலோ போலீஸ்க்கு தகவல் கொடுத்த விபரத்தை எனது விசாரணையில் இருந்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எதிரிகள் ஹலோ போலீஸ்க்கு தகவல் கொடுத்து இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது ஆட்களை போலீசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்ற விபரத்தை எனது விசாரணையில் இருந்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சார்பு ஆய்வாளர் திரு.கோட்டைச்சாமி அவர்கள் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்ததால் நான் தனியாக சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் எதிரியின் பெயரில் உள்ள இடம் உள்ள இடத்தின் சர்வே நம்பர் மற்றும் யார் பெயருக்கு அரசாங்கம் அந்நிலத்தை வழங்கியது என்ற விபரத்தை நான் ஆவணங்களை பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த நிலம் குறித்து சம்மந்தப்பட்ட அரசாங்க ஊழியர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவம் நடைப்பெற்றதாக சொல்லபடும் நேரத்தில் சம்பவயிடத்தில் குடியிருக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் அ.சா.1 மற்றும் அ.சா.2 சம்பவயிடத்தில் இருந்து சுமார் 3 கி.மீ தொலைவில் வசித்து வருகிறார்கள் என்றாலும், அவர்கள் தான் சம்பவயிடத்திற்கு வந்து எதிரிகளிடம் பிரச்சனை செய்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1–ற்கும், எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சனை சம்மந்தமாக எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2023.10.31 17:08:07 +0530